# அறிவித்தல்

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட **“அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தம்”** மற்றும் **“நீதித்துறை (திருத்தம்)”**எனும் சட்டமூலங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

உயர் நீதிமன்றம் பின்வருமாறு தீர்மானித்துள்ளது;

- அரசியலமைப்பின் 83-வது உறுப்புரையின் ஏற்பாடுகளின்படி, "அரசியலமைப்பிற்கான இருபத்திரண்டாவது திருத்தச் சட்டமூலம்" அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியதில்லை.

- **“**அரசியலமைப்பிற்கான இருபத்தி இரண்டாவது திருத்தம்” மசோதாவின் வாசகம் 2 இல் உள்ள காப்பு வாசகத்தின் படி, அதில் தோன்றும் “හැට හතට එලඹෙන දිනය” என்ற சொற்றொடர் “හැට හත සම්පූර්ණ කළ දිනය” என்ற சொற்றொடரால் மாற்றப்படும்**.**

- **"**அரசியலமைப்பிற்கான இருபத்திரண்டாவது திருத்தச் சட்டமூலத்தின்" வாசகம் 2க்கு இரண்டாவது காப்பு வாசகமாக பின்வருவன சேர்க்கப்பட வேண்டும்**:**

  "மேலும், முதல் காப்பு வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு வருட பதவிக்கால வரம்பு, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியில் பிரதம நீதியரசர் பதவியை வகிக்கும் எந்தவொரு நபருக்கும் பொருந்தாது."

மேலும், உயர் நீதிமன்றம் பின்வருமாறு தீர்மானித்துள்ளது:

• "நீதித்துறை (திருத்த)" சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானவை அல்ல; எனவே, இதனை பாரளுமன்றத்தின் எளிய பெரும்பான்மை மூலம் நிறைவேற்றலாம்.

உயர் நீதிமன்றத்தின் முழுமையான தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.